திரு. நா. வீராசாமி : தலைவரவர்களே, "கரும்பு தின்னக் கூலி வேண்டுமா" என்று ஒரு பழமொழி உண்டு. ஆனால் அமைச்சரவர்கள் அறிவித்த கரும்பு வகைகள் எல்லாம் அதிகமாக சர்க்கரை கொடுக்கக் கூடியவைகளாக இருக்கின்றன. இப்போது தின்பதற்குத் தரமான கரும்பு இல்லை. அதனால் தின்னக்கூடிய நல்ல கரும்புவகைகளையும் பயிரிடுவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை. ப. நாராயணசாமி : தலைவரவர்களே, அந்தக் காலத்தில் கரும்பிலிருந்து நேரடியாக சர்க்கரையை சாப்பிடும் சக்தி படைத்த மனிதர்கள் இருந்தார்கள். அவர்கள் சர்க்கரையைப் பற்றி அதிகமாகக் கவலைப்படவில்லை. ஆனால் இந்தக் காலத்தில் சர்க்கரை விரும்பிகள் தான் அதிகமாக இருப்பதால், சர்க்கரை அதிகமாகக் கிடைக்கக்கூடிய கரும்பு சாகுபடியில் தீவிர கவனம் செலுத்தப்படுகிறது.

ஆற்றங்கரைகளில் தேக்குப் பயிர்

*636 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்தின் ஆற்றங்கரைகளில் தேக்கு பயிரிடும் சிறப்புத் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தமிழகத்தில் உள்ள கால்வாய்கள், ஆறுகள், ஏரிகளின் கரைகளில் தேக்கு, கருவேலம் போன்ற மரங்களைப் பயிரிடும் திட்டம் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலம் முதல் அமுலில் இருந்து வருகிறது.

கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கும் திட்டம்

*637 வினா.—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினவுக்கு விடையளிப்பாரா:

தமிழ்நாட்டிலுள்ள கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கிடும் தமிழ்நாடு அரசின் திட்டத்துக்கு மத்திய அரசு மானியம் ஏதேனும் வழங்குகின்றதா?